


# உங்கள் குழந்தைகள் விளையாட விரும்புகிறார்களா?

விளையாட்டுக் குழு ஒன்றில் சேர்ந்து விளையாடி இன்புறுவதற்கு ஏது செய்யும் வகையில் அவர்களுடைய குழுக் கட்டணங்களைச் செலுத்துவதில் உதவுவதற்காக 'கிட்ஸ்போர்ட் திட்டம்' தகுதி பெறும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு ஆண்டிற்கு $150 வரைக்குமான ஒத்தாசையை அளிக்கிறது.

ஒரு குழந்தையின் வளர்ச்சியில் விளையாட்டு என்பது இன்றியமையாதது: குழந்தைகளது தன்னம்பிக்கையை வளர்க்க இது உதவக்கூடும், மற்றும் குழந்தைகள் அவர்களது நண்பர்களுடன் சேர்ந்து உடல் ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு மகிழ்வதற்கு ஆரோக்கியமானதொரு வழியை ஏற்படுத்தித் தர விளையாட்டு முக்கியம்.

உடல் ரீதியான பலாபலன்களை அளிப்பது மட்டுமல்லாமல், குழந்தைகளது மன மற்றும் உணர்வு ரீதியான நலன் மீது நேர்முகமானதொரு தாக்கத்தினை சமூக விளையாட்டுகளில் ஈடுபடுவது ஏற்படுத்தும் என்பதனால் அவற்றில் கலந்துகொள்ளுமாறு 'உள்ளூர் அரசு, விளையாட்டு மற்றும் கலாச்சாரத் தொழில் திணைக்களம்' (The Department of Local Government, Sport and Cultural Industries) குழந்தைகளை வலுவாய் ஊக்குவிக்கிறது.

### யார் விண்ணப்பிக்கலாம்?

செல்லுபடியாகும் 'சுகாதாரப் பராமரிப்பு அட்டை' (Health Care Card) அல்லது 'ஓய்வூதியர் தள்ளுபடி அட்டை' (Pensioner Concession Card) ஆகியவற்றில் பட்டியலிடப்பட்டுள்ள 5 முதல் 18 வயது வரைக்குமான அனைத்து மேற்கு ஆஸ்திரேலியக் குழந்தைகளும் விண்ணப்பிக்கலாம் (கீழே படத்தில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரிகளைப் பாருங்கள்). கீழேயுள்ள வலைத்தளத்திற்குச் சென்றாலே போதும்:

**[www.dlgsc.wa.gov.au/kidsport](http://www.dlgsc.wa.gov.au/kidsport)**




தனது பற்றுச்சீட்டினை உங்கள் குழந்தை எந்த விளையாட்டுக் குழுக்களில் பாவிக்கலாம் என்பதைக் கீழே சொல்லப்பட்டுள்ள வலைத்தளத்தில் காணலாம்

**[https://kidsport.dlgsc.wa.gov.au/find-a-club](https://kidsport.dlgsc.wa.gov.au/find-a-club)**




இந்த நிதியுதவிக்கு விண்ணப்பிப்பதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் [kidsport@dlgsc.wa.gov.au](mailto:kidsport@dlgsc.wa.gov.au) மூலம் 'கிட்ஸ்போர்ட்' அணியினருக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள் அல்லது +61 8 9492 99 11 எனும் இலக்கத்தினை அழையுங்கள். உங்களுடைய உள்ளூர் நகரவை அலுவலகம், பாடசாலை, விளையாட்டுக் குழு அல்லது உள்ளூர் சமூகத் தொடர்பினராலும் உங்களுடைய விண்ணப்பத்தில் உதவ இயலக்கூடும்.

GOVERNMENT OF WESTERN AUSTRALIA
Department of
Local Government, Sport
and Cultural Industries